# பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30

# பட்டமளிப்பு விழா – 2024

**( 2019 மற்றும் 2020 தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு மட்டும் )**

## அறிவிப்பு

இக்கல்லூரியில் பட்டமளிப்பு விழாவானது 24-02-2024 அன்று நடைபெற இருப்பதால், பதிவுக் கட்டணமாக ரூபாய் 500/- செலுத்தி பதிவு செய்த மாணவர்கள் மட்டும் கீழ்க்கண்ட அறிவுரைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

| வ.எண் | தேர்ச்சி பெற்ற வருடம் (பட்டச் சான்றிதழின்படி) | பட்டமளிப்பு விழா நடைபெறும் இடம், தேதி, நேரம் |
|---|---|---|
| **1** | **2019 மற்றும் 2020** | **அண்ணா அரங்கம், பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30<br>24-02-2024 – காலை 8.00 மணி** |

1. பட்டமளிப்பு விழா நடைபெறும் நாட்களில் பட்டம் பெறும் மாணவர்கள் காலை 8.00 மணிக்கு நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு வருகை புரிதல் வேண்டும். காலை 8.00 மணிக்கு பிறகு வரும் மாணவர்கள் நிச்சயம் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

2. **பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளும் மாணவர்கள் ரூபாய் 500/-பதிவுக் கட்டணமாக செலுத்திய உண்மையான ரசீதை** (Bill Receipt) **கண்டிப்பாக கொண்டு வரவேண்டும். நகல் மற்றும் அலைபேசியில்** (Xerox & Mobile Photo) **உள்ள புகைப்படம் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.**

3. **நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் ஆதார் அட்டை** (Aadhar Card Xerox) **நகலைக் கொண்டு வரவேண்டும்.**

4. **இக்கல்லூரியில் படித்ததற்கான ஏதாவது சான்றிதழ்** (Provisional, Marksheet, TC Xerox) **ஆதாரங்களின் நகல்களைக் கொண்டு வரவேண்டும்.** ஆதார் அட்டை நகல் மற்றும் கல்லூரியில் பயின்றதற்கான சான்றிதழ் நகலினை ஒன்றாக முள் இணைப்பின் **(Stapler Pin)** மூலம் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5. **மேற்கூறிய ஆதாரங்களைக் கொண்டு வராத மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**

6. மேற்கூறிய ஆதாரங்களை தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைப் பேராசிரியரிடம் ஒப்படைத்து, தங்களுக்கு வழங்கப்பட்ட வரிசை எண்ணை (**Token Number**) கூறி, பெயர் பட்டியலில் தங்களது பெயரை சரிபார்த்து கையொப்பமிட வேண்டும்.

அதன் பிறகு சம்பந்தப்பட்ட மாணவருக்கு இருக்கை, தின்பண்டம் மற்றும் மேலங்கிக்கான வரிசைச் சீட்டு வழங்கப்படும்.

7. மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வரிசைச் சீட்டு மூலம் முதலில் தின்பண்டம், இரண்டாவதாக மேலங்கியைப் பெற்றுக் கொண்டு, இறுதியில் விழா நடைபெறும் அரங்கத்திற்குள் நுழைய வேண்டும்.

**8. பட்டமளிப்பு விழா அன்று மாணவர்களுக்கு வழங்கப்படும் மேலங்கிக்கு முன்பணமாக ரூபாய் 200/- செலுத்தி அதனை பெற்றுக் கொண்டு, பட்டமளிப்பு விழா முடிந்தவுடன் மேலங்கியை திரும்ப ஒப்படைத்து முன்பணமாக செலுத்திய தொகையைப் பெற்றுக் கொள்ளலாம். எனவே பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்கு பதிவு செய்த மாணவர்கள் கூடுதலாக ரூபாய் 200/- வரை கையில் இருப்பு வைத்திருக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

9. விழா முடியும் வரை மாணவர்கள் அவரவர் இருக்கையில் அமர்ந்து இருக்க வேண்டும். விழா நடந்து கொண்டு இருக்கும்பொழுது அரங்கத்தை விட்டு வெளியேறக் கூடாது.

10. மாணவர்கள் நேர்த்தியான ஆடை அணிந்து வர வேண்டும். கல்லூரியின் நற்பெயருக்கு எவ்வித கலங்கமும் ஏற்படாத வகையில் மாணவர்கள் நடந்து கொள்ள வேண்டும். மாணவர்கள் அலைபேசியை விழா நடைபெறும் அரங்கத்திற்குள் கொண்டு வர அனுமதி இல்லை.

**11. பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளும் மாணவருடன் கூடுதலாக பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒருவர் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது..**

12. மாணவர்ளுக்கு காலை, மதிய உணவுகள் மற்றும் பயணப்படிகள் வழங்கப்பட மாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

13. பட்டமளிப்பு விழா அன்று கல்லூரி நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட பேராசிரியர்கள் வழங்கும் குறிப்புரைகளைக் கேட்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டும். அவரவர்க்கு வழங்கப்பட்ட வரிசை எண் படி இருக்கைகளில் அமர வேண்டும். இருக்கைகளில் மாறி அமர்வதால் ஏற்படும் குழப்பத்தைத் தவிர்க்க வேண்டும்.

**14. விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாத மாணவர்களுக்கு எக்காரணத்தைக் கொண்டும் பதிவுக் கட்டணத்தை திரும்ப தர இயலாது என அறிவிக்கப்படுகிறது.**

15. விழா வெற்றிகரமாக முடிய தங்களது முழு ஒத்துழைப்பை வழங்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

கல்லூரி முதல்வர் (பொ)

# பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30

# பட்டமளிப்பு விழா – 2024

**( 2021 தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு மட்டும் )**

## அறிவிப்பு

இக்கல்லூரியில் பட்டமளிப்பு விழாவானது 25-02-2024 அன்று நடைபெற இருப்பதால், பதிவுக் கட்டணமாக ரூபாய் 500/- செலுத்தி பதிவு செய்த மாணவர்கள் மட்டும் கீழ்க்கண்ட அறிவுரைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

| வ.எண் | தேர்ச்சி பெற்ற வருடம் (பட்டச் சான்றிதழின்படி) | பட்டமளிப்பு விழா நடைபெறும் இடம், தேதி, நேரம் |
|---|---|---|
| 1 | 2021 | அண்ணா அரங்கம்,<br>பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30<br>25-02-2024 – காலை 8.00 மணி |

1. பட்டமளிப்பு விழா நடைபெறும் நாட்களில் பட்டம் பெறும் மாணவர்கள் காலை 8.00 மணிக்கு நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு வருகை புரிதல் வேண்டும். காலை 8.00 மணிக்கு பிறகு வரும் மாணவர்கள் நிச்சயம் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

2. **பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளும் மாணவர்கள் ரூபாய் 500/-பதிவுக் கட்டணமாக செலுத்திய உண்மையான ரசீதை** (Bill Receipt) **கண்டிப்பாக கொண்டு வரவேண்டும். நகல் மற்றும் அலைபேசியில்** (Xerox & Mobile Photo) **உள்ள புகைப்படம் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.**

3. **நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் ஆதார் அட்டை** (Aadhar Card Xerox) **நகலைக் கொண்டு வரவேண்டும்.**

4. **இக்கல்லூரியில் படித்ததற்கான ஏதாவது சான்றிதழ்** (Provisional, Marksheet, TC Xerox) **ஆதாரங்களின் நகல்களைக் கொண்டு வரவேண்டும்.** ஆதார் அட்டை நகல் மற்றும் கல்லூரியில் பயின்றதற்கான சான்றிதழ் நகலினை ஒன்றாக முள் இணைப்பின் **(Stapler Pin)** மூலம் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5. **மேற்கூறிய ஆதாரங்களைக் கொண்டு வராத மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**

6. மேற்கூறிய ஆதாரங்களை தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைப் பேராசிரியரிடம் ஒப்படைத்து, தங்களுக்கு வழங்கப்பட்ட வரிசை எண்ணை (**Token Number**) கூறி, பெயர் பட்டியலில் தங்களது பெயரை சரிபார்த்து கையொப்பமிட வேண்டும்.

அதன் பிறகு சம்பந்தப்பட்ட மாணவருக்கு இருக்கை, தின்பண்டம் மற்றும் மேலங்கிக்கான வரிசைச் சீட்டு வழங்கப்படும்.

7. மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வரிசைச் சீட்டு மூலம் முதலில் தின்பண்டம், இரண்டாவதாக மேலங்கியைப் பெற்றுக் கொண்டு, இறுதியில் விழா நடைபெறும் அரங்கத்திற்குள் நுழைய வேண்டும்.

**8. பட்டமளிப்பு விழா அன்று மாணவர்களுக்கு வழங்கப்படும் மேலங்கிக்கு முன்பணமாக ரூபாய் 200/- செலுத்தி அதனை பெற்றுக் கொண்டு, பட்டமளிப்பு விழா முடிந்தவுடன் மேலங்கியை திரும்ப ஒப்படைத்து முன்பணமாக செலுத்திய தொகையைப் பெற்றுக் கொள்ளலாம். எனவே பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்கு பதிவு செய்த மாணவர்கள் கூடுதலாக ரூபாய் 200/- வரை கையில் இருப்பு வைத்திருக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

9. விழா முடியும் வரை மாணவர்கள் அவரவர் இருக்கையில் அமர்ந்து இருக்க வேண்டும். விழா நடந்து கொண்டு இருக்கும்பொழுது அரங்கத்தை விட்டு வெளியேறக் கூடாது.

10. மாணவர்கள் நேர்த்தியான ஆடை அணிந்து வர வேண்டும். கல்லூரியின் நற்பெயருக்கு எவ்வித கலங்கமும் ஏற்படாத வகையில் மாணவர்கள் நடந்து கொள்ள வேண்டும். மாணவர்கள் அலைபேசியை விழா நடைபெறும் அரங்கத்திற்குள் கொண்டு வர அனுமதி இல்லை.

**11. பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளும் மாணவருடன் கூடுதலாக பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒருவர் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது..**

12. மாணவர்ளுக்கு காலை, மதிய உணவுகள் மற்றும் பயணப்படிகள் வழங்கப்பட மாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

13. பட்டமளிப்பு விழா அன்று கல்லூரி நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட பேராசிரியர்கள் வழங்கும் குறிப்புரைகளைக் கேட்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டும். அவரவர்க்கு வழங்கப்பட்ட வரிசை எண் படி இருக்கைகளில் அமர வேண்டும். இருக்கைகளில் மாறி அமர்வதால் ஏற்படும் குழப்பத்தைத் தவிர்க்க வேண்டும்.

**14. விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாத மாணவர்களுக்கு எக்காரணத்தைக் கொண்டும் பதிவுக் கட்டணத்தை திரும்ப தர இயலாது என அறிவிக்கப்படுகிறது.**

15. விழா வெற்றிகரமாக முடிய தங்களது முழு ஒத்துழைப்பை வழங்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

கல்லூரி முதல்வர் (பொ)